# செம்மொழித் தமிழ்
(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

# Journal of Classical Thamizh
(A Quarterly International Multilateral Thamizh Journal)

தொகுதி-8 எண் 4
Vol. 8 No. 4

புரட்டாசி- மார்கழி 2051
October - December 2020

ISSN : 2321-0737



**Chief Editor**
Dr. M. Sadik Batcha
**Advisory Editor**
Dr. Aranga. Pari
**Editorial Board**
Dr. S. Rajaram
Dr. G. Rajagopal
Dr. PM. Jamahir
Dr. P. Velmurugan
Dr. A. Rameez
Dr. E.R. Ravichandran
Dr. K. Thilagavathi
Dr. G. Sheik Meeran
Dr. P. Selvakumar
Dr. Senthil Prakash
Dr. T. Jegathesan
Dr. J. Chandrakala
Dr. T.K. Jasmin Sudha
Dr. R. Tamilselvan
Dr. S. Ramesh
Dr. S. Thangamani
Dr. Vaani Arivalan
Dr. Manivannan Murugesan
Dr. G. Mariappan
Dr. K. Manickaraj


சான்றிதழ்

## Certificate

*This is to certify that Dr. / Mr. / Ms.*


முனைவர் ஆ.இராஜாத்தி
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி),
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்றது)
திருச்சிராப்பள்ளி-2, தமிழ்நாடு, இந்தியா.


*has Published a paper titled*

பாரதிதாசன் கவிதைகளில் திருக்குறள் கருத்துக்கள்


Sl.No. 124 150
Pages : 693-698

Published by

**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com



Chief Editor
**Dr. M. Sadik Batcha**
Associate Professor
PG and Research Department of Thamizh
Jamal Mohamed College (Autonomous)
Tiruchirappalli - 620 020, Tamil Nadu, India
Mobile : 94434 17242, Email : ms_batcha@yahoo.co.in

# பாரதிதாசன் கவிதைகளில் திருக்குறள் கருத்துக்கள்

முனைவர் ஆ. இராஜாத்தி
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி),
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்றது), திருச்சிராப்பள்ளி-2, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

பாரதிதாசன் கவிதைகளில் திருக்குறள் கருத்துக்கள் எனும் ஆய்வுக்கட்டுரையில் புரட்சி கவிஞர் பாரதிதாசன் திருக்குறள் மீது கொண்டுள்ள பற்றின் காரணமாகக் குறள் கூறும் அறங்களைத் தம் கவிதைகளில் கையாண்டுள்ளார். அமிழ்து எது?, ஏற்றப்பாட்டு, புரட்சி திருமணத்திட்டம், காதல் கவிதைகள் போன்ற உட்தலைப்புகளில், பாரதிதாசன் கவிதையும் திருக்குறளும் ஒப்பு நோக்கப்பெற்றுள்ளன. கவிதைகளில் இடம்பெற்றுள்ள திருக்குறள் கருத்துக்கள், சொல்லாட்சி, திருக்குறளின் பெருமை போன்றவற்றினை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றன. முடிவுரையில், ஆய்வுக்கட்டுரையில் ஒப்பு நோக்கப்பட்டுள்ள கருத்துக்களைத் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. கட்டுரையின் இறுதியில் சான்றெண் விளக்கமும் இடம்பெற்றுள்ளன.

**அருஞ்சொற்கள்**

பேதைமை – அறியாமை. அமிழ்து – மழை. உறுதோறும் – தழுவுதல். தீண்டலாற் – தொடுதல். மதியுடையார் – அறிவுடையார். ஈரடி – திருக்குறள். ஆரியர் பார்ப்பனர் – வடவர், இனத்தார். வைதீகம் – வேதநெறிகள். பேணுதல் – பாதுகாத்தல். மனைமாட்சி – மனைவியின் நற்பண்பு, இல்லாள் பெருமை. வல்வரவு – விரைவான வருகை. ஒழுக்கம் – பண்பு.

**முன்னுரை**

இருபதாம் நூற்றாண்டுக் கவிதையுலகில் பாரதிதாசன் தனித்த இடம்பெறுகிறார் எனலாம். பாவேந்தர் என அனைவராலும் அழைக்கப்படுகின்றார். எழுச்சி மிகுந்த, புரட்சிகரமான பாடல்களைப் பாடியுள்ளதால் புரட்சிக்கவிஞர் எனவும் போற்றப்படுகின்றார். பாரதிதாசனைப் பின்பற்றிப் பாரதிதாசன் பரம்பரை எனப் பெரிய கவிஞர் பேரணியே உருவாகியுள்ளனர். அந்தளவுக்குத் தமிழிலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளார். பண்டைய இலக்கியங்களில் ஊறிப் போய் இருப்பவர்களுக்குப் புத்திலக்கியங்களில் மிகுதியும் ஈடுபாடு இல்லாமல் போவதுண்டு. ஆனால் பாரதிதாசன் பழைய இலக்கியங்கில் உள்ள கருத்துக்களையும் தம் பாடல்களில் புதிய வடிவில் பதிவிட்டுள்ளார். சங்க இலக்கியத்தாக்கம், திருக்குறள் போன்றவற்றினைக் கவிதைகளில் இடம்பெறச்செய்துள்ளார். திருக்குறள் கருத்துக்களைப் புதிய நோக்கிலும், திருவள்ளுவரின் சொல்லையும் கவிதைகளில் கையாண்டு திருக்குறளுக்குப் பெருமை அளித்துள்ளார் என்றால் அது மெய்யானதே.

உலகப்பொதுமறையாம் திருக்குறள் வாழ்வியல் நெறிகளை எடுத்துரைக்கும் கருவூலமாகத் திகழ்கிறது. இவ்வாழ்வியல் நெறிகள் எல்லாக் காலத்திற்கும் தேவையாகிறது. பாரதிதாசனுக்கு முன்பும் சரி இவருக்குப் பின்பும் வள்ளுவரின் கருத்துக்களைப் பலரும் தமிழில் எடுத்துரைத்துள்ளனர். அவ்வகையில், பாரதிதாசன் திருக்குறள் செல்வங்களை இக்காலத் தலைமுறையினரும் அறிய எடுத்துக்காட்டியுள்ளார். சமுதாயம் மேம்படவும், மறுமலர்ச்சியடையவும் இக்கருத்துக்களைப் பதிவிட்டுள்ளார் என்ற பார்வையில், இக்கட்டுரை ஆராயப்படவுள்ளன. புதிய இலக்கிய வகைக்குத் திருக்குறளின் செல்வாக்குப் பயனளிக்கின்றதையும் உணரமுடிகின்றது.

**“நூலைப்படி சங்கத் தமிழ்**
**நூலைப்படி – முறைப்படி**

நூலைப்படி

----------

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும்"[1]

என்று திருக்குறளின் பெருமையைக் குறிப்பிடுகின்றார். சங்க இலக்கியத்தின் மீதும் திருக்குறளின் மீதும் அவர் கொண்டுள்ளப் பற்று புலனாகின்றது.

**அமிழ்து எது? கவிதையில் திருக்குறள் விளக்கம்**

அமிழ்து எது எனும் கவிதையில் பொங்கல் அமிழ்து, கரும்பு அமிழ்து, கனி அமிழ்து, முல்லை அரும்பு அமிழ்து, தேன் அமிழ்து, அப்பம் அமிழ்து, குழந்தை குதலை மொழி அமிழ்து, பழந்தமிழ்ப் பாட்டு அமிழ்து, தமிழ்ப் பண் அமிழ்து, திங்கள்அமிழ்து, ஆவின் பால் அமிழ்து, இங்கு எனக்கு நீ அமிழ்து, வாய்மை அமிழ்து, தாய்மை அமிழ்து, தனி இன்ப வீடு அமிழ்து, தென்றல் அமிழ்து, நறுஞ்செவ்விள நீரமிழ்து ... என உயர்ந்தோர்கள் உயர்ந்த பொருளையெல்லாம் அமிழ்து என உரைப்பார்கள்.

"கண்டவை எல்லாம் அமிழ்தே
என்று கதைபேசிக்
கொண்டிருப்போர் பேதைமையைக்
கண்டே இவ்வாறு உரைத்தார்"[2]

எனக் கூறுகின்றார். ஆனால் அமிழ்து என்பது என்ன எனபதை இவ்விளைய தலைமுறையினாக்கு உணர்த்த முற்படுகின்றார். அதற்கு வள்ளுவரின் கருத்தினைத் தம் கவிதை வழி எடுத்து விளக்குகிறார். இதனை,

"வானின்று உலகம்
வழங்கி வருவதால்
தானமிழ்தம் என்றுணரற்
பாற்"[3]

என்று சாற்றிய வள்ளுவர் பாட்டை வகையாகச் சொல்லி வெளிப்படுத்துகிறார். எத்தனை வகையான அமிழ்து உடையப் பொருளை உணர்த்தினாலும் 'அமிழ்து என்பது மேல்நின்றமிழும் உணவு' என மழையைக் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளதே மேன்மையானதாகும். வள்ளுவர் மழையை உயிரினங்களுக்கான சாவா மருந்து எனக்குறிப்பிட்டுள்ளார். வள்ளுவரின் மற்றும் ஒரு குறள் கருத்தினையும் எடுத்துரைக்கின்றார். தன்னை நம்பி வாழும் காதலியர்க்கு அவள் விரும்பும் காதலர், உரிய காலத்தில் வந்து அன்பு காட்டுவது போன்றே, மழையை எதிர்பார்த்து நம்பியிருக்கும் உயிரினங்களுக்கு வானம் பருவ காலத்தே மழை பொழிவது போன்றதாகும். வள்ளுவர் மழையின் அருமையை விளக்கியுள்ளதை அவ்வாறே தம் கவிதையில்,

"வாழ்வார்க்கும் வானம்
பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும்
அளி"[4]

என்றார்.

உலகில் எத்தை வகையான பொருளை அமிழ்து என்று கூறி வந்தாலும் வள்ளுவர் சொல்லும் மழைதான் அமிழ்து என்பதாகும். அமிழ்து என்று உணரும் அருமை மழைக்கே அமையும் என மழையின் பெருமையைச் சாற்றியுள்ளார். வள்ளுவர் பெண்ணின் தோள் அமிழ்து எனக்குறிப்பிட்டுள்ளார் அவற்றையும்,

"உறுதோறு உயிர்தளிர்ப்பத்
தீண்டலாற் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன
தோள் என்ற பாட்டில்"[5]

பெண்ணின் தோளும் அமிழ்தம் ஆகும் என்கிறார். அத்தோளினைத் தளிர்க்க வைப்பது மழையே. அதாவது,

"குளிர்மழையை அன்னார்
அமிழ்தென்றார்! கூறும்
அதனால் அமிழ்தை
மழையென்றே சொன்ன
மதியுடையார் சொல்லால்
மகிழ்ந்து நலமடைவாய்"[6]

என வள்ளுவரின் குறள்களை எடுத்து விளக்கியுள்ளார்.

**ஏற்றப்பாட்டு கவிதையில் திருக்குறள் பெருமை**

பாரதிதாசன் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஏற்றப்பாட்டு என்பவற்றில் திருக்குறள் கருத்துக்களைப் பதிவிட்டுள்ளார். திராவிடரின் கலை ஒழுக்கங்களைப் பற்றிப் பாடும்போது

**"இங்கு வள்ளுவன் தான்**
**ஈரடியும் தந்தான் – தம்பி"[7]**

என்று தம்பிக்கு வள்ளுவரின் குறளை உணர்த்துகின்றார். திராவிட நாடு குற்றமற்ற கொள்கையுடையது. மதம், கடவுள், உருவம், தேர், சமயம் என்று எதுவும் திராவிடத்தில் இல்லை. உண்மையுடையவர்களுக்கு மதம் தேவையில்லை எனத் தம்பிக்கு அறிவுறுத்தும் வகையில் ஏற்றப்பாட்டைப் பாடியுள்ளார் கவிஞர். சாதியில்லை, மக்களிடத்தில் தாழ்வு உயர்வும் கிடையாது. நீ

**"தீதகற்ற வந்த – நம்**
**திருக்குறளைப் பாராய்."[8]**

எனவும்,

**"வள்ளுவரின் நூலே – நல்ல**
**வழி அளிக்கும் தம்பி"[9]**

எனவும்,

**"அச்சம் இல்லை தம்பி – நல்ல**
**அறம் இருக்கும் போது!"[10]**

என்று தம்பிக்கு அறிவுறுத்துகிறார். இந்தத் தமிழ்ச் சமுதாயத்தைக் குழியில் வீழ்த்த குள்ளர்கள் குழிபறிக்கின்றார்கள். அந்தக் குழியில் விழாமல், தமிழ் இனத்தார்கள் உளம் ஒற்றுமையுடனும், பொறாமையைத் தள்ளியும், பேராசையை நீக்கியும் சினத்தைப் போக்கியும் வாழ வள்ளுவரின் திருக்குறளை வலியுறுத்துகின்றார்.

**புரட்சி திருமணத்திட்டம் – திருக்குறள் பதிவு**

பழந்தமிழ் இலக்கியத்தில் திருமணச்சடங்குகள் இல்லை. ஆனால் இடைக்காலத்தில் வைதீக மரபின் படி தமிழர் திருமணச்சடங்குகளைக் கையாளுகின்றனர். பாரதிதாசன் இதற்காகவே புரட்சி திருமணத் திட்டம் எனும் கவிதையைப் படைத்துள்ளார். இது திராவிடருக்கான திருமண முறையாகக் கூறுகின்றார். திருமணச்சடங்கை வாழ்க்கை ஒப்பந்தம் என்றும் பெயரிடுகின்றார். இத்திருமண முறையில் முன்மொழிதலும் வழிமொழிதலும் தேவை.

**"ஆரியர் பார்ப்பனர் அடா மணமுறையை**
**வேரோடு சாய்க்க வேண்டும் அன்றோ?"[11]**

என்று குறிப்பிடுகின்றார்.

**"வைதிக மணத்தை மெய்என ஒப்பிடில்**
**தமிழர் பண்பு தலை சாயாதோ?"[12]**

என்று வினவுகிறார். திருவள்ளுவரின் திருநெறியை மாய்க்காதிர். வள்ளுவர் குறிப்பிடும் கருத்தில் புரட்சி திருமணத்தை நடத்துவீர். இதனை,

**"தெய்வம் தொழாஅள் கொழுநன்**
**தொழுதொழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை"**

எனப் பேசும் திருவள்ளுவனார் திருநெறி மாய்ப்பதோ?[13]

மணமக்கள் உறுதியளிக்க வேண்டும். இருவரும் வள்ளுவரின் அறமொழிகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**"அன்பும் அறனும்**
**உடைத்தயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும்**
**அது"**

என்றார் வள்ளுவர். [14]

இல்வாழ்வு சிறக்க அன்பும் அறனும் இருந்தால் நல்ல நன்மை நல்ல பயன்களை நாளும் அடையலாம் என்றுரைக்கின்றார்.

இல்வாழ்க்கையில், துணைவனின் வருவாய் அறிந்து செலவு செய்ய வேண்டும் என்பதை,

**"மனைத்தக்க மாண்புடையாள்**
**ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத்**
**துணை"**

என்றார் வள்ளுவனார். [15]

குறிப்பிடும் மொழியை எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் தன்னையும் காத்து தன் கொழுநனையும் காத்துக் கொள்ள வேண்டும் என்பதை,

**"தற்காத்துத் தற்கொண்டான்**
**பேணித் தகைசான்ற**
**சொற்காத்து சோர்விலால்**
**பெண்''**

என்று சொல்லுக்கின்றார். [16]

என்ற வள்ளுவரின் அறமொழிகளை எடுத்துரைத்து, தமிழரின் திருமணத்தை மீட்டெடுக்கும் தன்மையைக் காணலாம். நன்மக்கட் பேறு பெறுவதை,

**"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு"**

பெறுக. எனவும்

**"வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி**
**பண்பின் தலைப்பரிதல் இல்"**

மறவாதீர் எனவும்

**"இளிவரின் வாழாத மானம் உடையார்**
**ஒளிதொழு தேத்தும் உலகு"**

தெளிக எனவும். [17]

தம் படைப்பில் பதிவிட்டமையைப் போற்றலாம். மணமக்களை இணைந்து இன்புற்று நன்மக்களைப் பெற்று நீடுழி வாழ்க என வாழ்த்துகின்றார். வைதீக திருமணமுறை விட்டொழித்து, வள்ளுவரின் அறநெறியில் திருமணம் செய்ய வேண்டும் எனப் பாரதிதாசன் விரும்பியுள்ளதைக் காணலாம். தற்காலத்தில் திராவிட கழகத்தார்கள் பாரதிதாசன் விரும்பிய புரட்சி திருமண முறையைப் பின்பற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

### பாரதிதாசனின் காதல் கவிதைகளில் திருக்குறள் செல்வாக்கு

திருக்குறளில் வள்ளுவர் களவு கற்பு இயல்களில் காதல் உணர்வுகளைத் தலைவன், தலைவி வழி கூறியுள்ளார். பாரதிதாசனும் தம்கவிதைத் தொகுப்பில் காதல் பாடல்கள் என்ற பகுதியில் பாடுபொருளாக அகம் சார்ந்த கருத்துக்களைப் பாடியுள்ளார். வள்ளுவர்,

**"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்று நின்**
**வல்வரவு வாழ்வார்க்கு உரை"[18]**

என்றுரைத்துள்ளதை,

**"இருப்பதாய் இருந்தால் என்னிடம் சொல்க – நீ**
**போவதாய் இருந்தால் என் கட்டைக்குச் சொல்"[19]**

என்று பளிச்சென்று பாரதிதாசனின் கவிதைத்தலைவி உரைப்பதைக் காணமுடிகின்றது.

### அவள் துடிப்பு

வள்ளுவர் தலைவன் மீது தலைவிக்குப் பொய்யான ஊடல் தோன்றுகின்றதைக் குறிப்பிட்டுள்ளார்.

**"கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்து உணராய்**
**பொய்க்காய்வு காய்தி என் நெஞ்சு"[20]**

காதலன் மீது பொய்யான வெறுப்பினைக் கொள்கிறாள் தலைவி இதனை, பாரதிதாசன்

**''கொடியவன் பிரிந்தான் என்பதால் என்னுளம் இறங்கும் – பின்**
**கொஞ்ச வருவான் என அது மீண்டும் பிறக்கும்''[21]**

எனப் பதிவிட்டுள்ளார்.

### அவன் வாராதபோது...

தலைவன் வரவில்லை என்றால், தலைவிக்கு முல்லை மலர் தனை நகைப்பது போன்றும், முத்தமிழும் தெவிட்டுவதாயும், கிளியின் பேச்சும் வெறுப்பேற்றும், தென்றல் புலி போல் சீறும் இவ்வாறு இன்னும் பல இன்னல்களை அனுபவிப்பதாகக் கூறுகின்றார். இதற்கு வள்ளுவரின்

**"வீழ்வாரின் இன்சொல் பெறாது உலகத்து**
**வாழ்வாரின் வன்கணார் இல்"[22]**

எனும் குறள் கருத்தைப் பாரதிதாசன்

"பாலும் புளிக்கும் நறும் பண்ணியங்கள் வேப்பங்காய்
தோளும் எரியும் தோய்கலவை! – மேலும்
அலவனார் ஆர்கலியும் கொல்லும் என்காதற்
புலவனார் வாராத போது!"[23]

**பொழுது விடியவில்லை**

பொழுது விடியவில்லை எனம் தலைப்பில் தலைவன் பிரிவால் வாடும் நிலையைக் காணமுடிகின்றது. வள்ளுவர் கூறும்,

**"மறப்பின் எவனாவன் மற்கொல் மறப்பு அறியேன்**
**உள்ளினும் உள்ளம் சுடும்"[24]**

என்ற குறள் கருத்தினைப் பாரதிதாசன்

**"மறக்க முடியவில்லை**
**வாழ்வில் மகிழ்ச்சி இல்லை**
**இறக்கவும் மனம் இல்லை**
**இருந்திடில் இந்தத் தொல்லை**
**பெறத்தகுமொ அவன் வரவு? – வரப்**
**பெற்றால் கழியும் இந்த இரவு!"[25]**

என்று பிரிவால் தூக்கம் வராமல் தவிக்கும் பெண்ணின் நிலையைப் பதிவிட்டுள்ளார்.

**ஒழுக்கம் விழுப்பந்தரும்**

ஒழுக்கம் விழுப்பம் தரும் எனும் தலைப்பில் கவிதைப் படைத்த பாரதிதாசன் வள்ளுவரின் சொல்லாட்சியைப் பயன்படுத்தியுள்ளதைக் காணலாம். நன்றியறிதல் பொறையுடைமை, இன்சொல், இன்னாசெய்யாமை, கல்வி, ஒப்புரவு, அறிவுடைமை எனும் தலைப்பில் நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் உணர்த்தும் விதமாகக் கவிதை அளித்துள்ளார்.

**முடிவுரை**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதைகள் எனும் தொகுப்பில் இடம் பெற்றுள்ள திருக்குறள் கருத்துக்கள் எனும் இக்கட்டுரையில், பாரதிதாசன் திருக்குறள் சொல்லாட்சி, திருக்குறளை அப்படியே எடுத்தாளுதல், திருக்குறளின் கருத்தினை மீட்டுருவாக்கம் செய்தல் போன்ற நிலையில் தம் கவிதைகளில் இடம்பெறச்செய்துள்ளார்.

அமிழ்து எது? என்பதற்கு வள்ளுவர் கூறும் கருத்தினையே எடுத்துரைக்கின்றார். அமிழ்து என்றால் மழைமட்டும் தான். வானம் தரும் மழைக்குப் பிறகுதான் மற்ற பொருள்கள் என விளக்கியுள்ளார்.

ஏற்றப்பாட்டு எனும் கவிதையில் சமுதாய முன்னேற்றத்திற்குத் திருக்குறள் அவசியமான ஒன்று. ஈரடியின் பெருமையினை வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள வைதிக திருமண முறை ஒழிய வேண்டும் என விரும்பியதால், புரட்சி திருமணத் திட்டம் எனும் கவிதையைப் படைத்து, அவற்றில் திருக்குறளின் அறமொழிகளை அறிவுறுத்தியுள்ளார்.

வள்ளுவர் கூறும் களவு, கற்பு கருத்துக்களைக் காதல் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். தலைவியின் பிரிவு நிலை, தலைவன் வராதபோது தலைவியின் மனநிலை போன்ற கருத்துக்களை எடுத்தாண்டுள்ளதைக் காணலாம் தற்காலத் தமிழகம் மனநலம் பெறவும், இனநலம் பெறவும் பாரதிதாசன் திருக்குறள் கருத்துக்களைக் கையாண்டுள்ளார். சமுதாய மறுமலர்ச்சிக்கு உதவும் வகையில் திருக்குறள் அமைந்துள்ளமையைப் பாரதிதாசனின் கவிதைகளும் மெய்ப்பிக்கின்றன. உயர்ந்த அறங்கள் உடைய நூல் திருக்குறள். இவ்வறங்களை வெளிப்படுத்தும் நோக்கிலே பாரதிதாசனும் தம் கவிதைகைளைப் படைத்துள்ளார்.

**சான்றெண் விளக்கம்**

1. பாரதிதாசன் பன்மணித்திரள் பக். 321-322
2. பா. கவி. பக். 357, பாரதிதாசன் கவிதைகள் நான்கு தொகுதிகள் (முழுவதும்), கங்கை புத்தக நிலையம், 13, தீனதாயளு தெரு, தி. நகர், சென்னை -600 017, எட்டாம் பதிப்பு – 2010.
3. பா. கவி. பக். 356
4. மேலது, பக். 363
5. மேலது, பக். 364
6. மேலது, பக். 365

7. மேலது, பக். 401
8. மேலது, பக். 403
9. மேலது, பக். 404
10. மேலது, பக். 404
11. மேலது, பக். 459
12. மேலது, பக். 460
13. மேலது, பக. 462
14. மேலது, பக். 462
15. மேலது, பக். 462
16. மேலது, பக். 462
17. மேலது, பக். 463
18. திருக்குறள் 1151
19. பாரதிதாசன் காதல் பாடல்கள் பக். 37
20. திருக்குறள் 1246
21. பா. கவி. பக். 475
22. திருக்குறள் 1198
23. பா. கவி. பக். 474
24. திருக்குறள் 1207
25. பா. கவி. பக். 475

# ST. JOSEPH'S COLLEGE (AUTONOMOUS), TIRUCHIRAPPALLI – 2
## EXTENSION DEPARTMENT- SHEPHERD

## WOMEN EMPOWERMENT (பெண்கள் அதிகாரம்) - A WOMEN'S DAY SPECIAL PROGRAM

**DATE:** 10. 03.2021 | **TIME:** 3:15 PM - 5:45 PM

**CHIEF GUEST**

**Dr. A. Rajathi**
Associate Professor of Tamil,
St. Joseph's College (Autonomous), Trichy

**SPECIAL INVITEES**

**Fr. M. Berchmans**
Shepherd Director,
St. Joseph's College (Autonomous), Trichy

**Dr. A. Francis Vijayakumar**
Assistant Professor of Commerce,
St. Joseph's College (Autonomous), Trichy

**SHEPHERD COORDINATOR**

**Mr. S. Raja**
Senior Coordinator,
Shepherd Department

**Location:** THAGORE STREET

விரிவாக்கத்துறை – செப்பர்டு
செயின்ட் ஜோசப் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 002

# உலக பெண்கள் தின விழா

நாள் :14.03.2021 ஞாயிற்றுக்கிழமை    நேரம் : மாலை 04.00 மணி முதல் 07.30 மணி வரை

இடம் : போசம்பட்டி, திருச்சிராப்பள்ளி

**நிகழ்ச்சி நிரல்**

வரவேற்புரை : **செல்வன். A. ஜார்ஜ் பெர்னாண்டஸ்**
மூன்றாமாண்டு இளங்கலை இயற்பியல் துறை

தலைமை : **திரு. M. சக்திவேல்**
தலைவர், போசம்பட்டி ஊராட்சி

முன்னிலை : **திருமதி. M. சாரதாமணி**
தலைவி, நந்தவனம் மகளிர் சுயஉதவிக்குழு, போசம்பட்டி
**திருமதி. T. ராணி**
தலைவி, பூம்புகார் மகளிர் சுயஉதவிக்குழு, போசம்பட்டி
**திருமதி. S. பாமா**
தலைவி, கிளைமான் மகளிர் சுயஉதவிக்குழு, போசம்பட்டி
**திருமதி. C. சித்ரா**
தலைவி, கவிமணி மகளிர் சுயஉதவிக்குழு, போசம்பட்டி
**திருமதி. R. நளினி**
தலைவி, உதயம் சுயஉதவிக்குழு, போசம்பட்டி
**திருமதி. S. ரம்யா**
தலைவி, கண்மணி சுயஉதவிக்குழு, போசம்பட்டி

சிறப்புரை : **முனைவர். A.ராஜாத்தி**
பேராசிரியை, தமிழாய்வுத்துறை,
செயின்ட் ஜோசப் தன்னாட்சி கல்லூரி, திருச்சிராப்பள்ளி

கலைநிகழ்ச்சிகள், பங்கேற்பாளர்களின் பகிர்வு மற்றும் பரிசளிப்பு

நன்றியுரை : **செல்வன். R. அபிஸ்டீபன்**
மூன்றாமாண்டு இளங்கலை இயற்பியல் துறை

பங்கு பெறுக !    பயன் பெறுக!